உ.

சிவமயம்.



ஸ்கந்த கலாந்யாஸம்.

குமாரதந்திரத்திலுள்ளது.

இஃது

ஸ்ரீகோவிலூர் வித்தியாசாலை

பிர்மஸ்ரீ ஆதிசேஷசாஸ்திரியவர்களால்

மொழிபெயர்க்கப்பட்டது

சிதம்பரம் கோ. சித. மடாலய வெளியீடு.

உ

சிவமயம்

ஸ்கந்த கலாந்யாஸம்.

இஃது குமாரதந்திரத்திலுள்ளது.

ஓம் ஸாம் ஜகத்புவஞ்சயாயை நம:	ஈசாநமூர்த்நி.	
ஓம் ஸாம் பகுதோபலாயை நம:	பூர்வமூர்த்நி.	
ஓம் ஸாம் ஹ¬தமுன்னதாயை நம:	தட்சிணமூர்த்நி.	
ஓம் ஸாம வசத்புவேவாமாயை நம.	உத்தரமூர்த்நி.	
ஓம் ஸாம் நமஸ்தேஸ்துநந்தின்யை நம:	பச்சிமமூர்த்நி.	5
ஓம் ஸாம் விச்வபுவேவிசயாயை நம:	நைர்ருதமூர்த்நி.	
ஓம் ஸாம் ஜகத்புவோதிபதிர்சராயை நம:	ஈசாநவக்த்ரே.	
ஓம் ஸாம் சேநாநிச்சேந்நாயை நம:	பூர்வவக்த்ரே,	
ஓம் ஸாம் மயூரப்ரியாயை நம:	தட்சிணவக்த்ரே.	
ஓம் ஸாம் சடாநநச்சாந்த்யை நம:	உத்தரவக்த்ரே,	10
ஓம் ஸாம் சத்வாயாகன்னமஸ்தேஸ்து சத்யாயை நம:	பச்சிமவக்த்ரே,	

ஓம் ஸாம் சுகம்வஹஸ்வசூட்சமாயை நம: நைர்ருதவக்த்ரே.
ஓம் ஸாம் சுப்ரம்மண்யசுமத்யை நம: ஹ்ருதயே.
ஓம் ஸாம் ப்ருகஸ்பதேச்சுதாமப்ரஞ்ஞாயை நம: களே.
ஓம் ஸாம் அஸ்யபத்மயோநேகம்ருதாயை நம: தட்சிணபாஹௌ. 15
ஓம் ஸாம் அயஸ்யாத்மயசஸே நம: வாமபாஹௌ.
ஓம் ஸாம் வஹனேவஹந்துவணிஷ்டாயை நம: நாபௌ.
ஓம் ஸாம் சுப்ரம்மண்யசுப்ரதிஷ்டாயை நம: குட்செள.
ஓம் ஸாம் ருத்ரபுவேருசிராயை நம: ப்ருஷ்டே.
ஓம் ஸாம் ப்ரம்மபுவேப்ராமிண்யை நம: உரசி. 20
ஓம் ஸாம் புவத்புவேபூத்யை நம: குஹ்யே.
ஓம் ஸாம் அபூதாயமான்யாயை நம: சிச்னே.
ஓம் ஸாம் ஜகத்புவேசிவாதவே நம: தட்சிணோரௌ.
ஓம் ஸாம் சுப்ரம்மண்யசுத்தாயை நம: வாமோரௌ.
ஓம் ஸாம் கார்த்திகாசுதக்ருபாயை நம: தட்சிணசானுனி. 25
ஓம் ஸாம் ஷஷ்டாங்கசத்ராயை நம: வாமசானுனி.

ஓம் ஸாம் சகத்புவேசகத்யை நம: தட்சிணசங்காயாம்.
ஓம் ஸாம் வசித்புவேவரதாயை நம: வாமசங்காயாம்.
ஓம் ஸாம் ஸ்கந்தவிசாகினேகாமதாயை நம: தட்சிணபாதே.
ஓம் ஸாம் ஹவ்யம்யஸ்மாத்தரிண்யை நம: வாமபாதே. 30
ஓம் ஸாம் ஷண்முகாயச்யாமாயை நம: வ்யாபகாஞ்சலி:

ஸ்கந்தகலாந்யாஸம் முற்றிற்று. சுபம்.

ஸுப்ரமண்யமாத்ருகாந்யாஸம்.

ஓம் ஸாம் அம் அமரேச்வராய நம: மகுடே.
ஓம் ஸாம ஆம் ஆராத்யாய நம: லலாடே.
ஓம் ஸாம் இம் இந்த்ரபுரோகமாய நம: தட்சிணநேத்ரே.
ஓம் ஸாம் ஈம் ஈசபுத்ராய நம: வாமநேத்ரே.
ஓம் ஸாம் உம் உமாபுத்ராய நம: தட்சிணச்ரோத்ரே. 5
ஓம் ஸாம் ஊம் ஊர்த்வரேதச்சுதாய நம: வாமச்ரோத்ரே.
ஓம் ஸாம் ரும் ரமாப்ரியாய நம: தட்சிணநாசாபுடே.
ஓம் ஸாம் ரூம் ருணோத்தாரகாய நம: வாமநாசாபுடே.


ஓம் ஸாம்	லும்	லட்ச்யாய நம:	தட்சிணகண்டே.	
ஓம் ஸாம்	லூம்	லட்சஞய நம:	வாமகண்டே.	10
ஓம் ஸாம்	ஏம்	ஏகநாயகாய நம:	ஊர்த்வோஷ்டே.	
ஓம் ஸாம்	ஐம்	ஐச்வர்யப்ரதாய நம.	அதரோஷ்டே,	
ஓம் ஸாம்	ஓம்	ஓசஸ்விநே நம:	ஊர்த்வதந்தபங்தௌ	
ஓம் ஸாம்	ஔம்	ஔபம்யரஹிதாய நம:	அதோதந்தபங்தௌ.	
ஓம் ஸாம்	அம்	அம்புஜாஸஞய நம:	தாலுமூலே.	15
ஓம் ஸாம்	அ:	அட்சீஞய நம:	தால்வக்ரே,	
ஓம் ஸாம்	கம்	கமண்டலுதராய நம:	தட்சிணபாஹௌ.	
ஓம் ஸாம்	கம்	கட்கபாணயே நம:	தட்சிணகூர்பரே.	
ஓம் ஸாம்	கம்	கங்காசுதாய நம:	தட்சிணமணிபந்தே.	
ஓம் ஸாம்	கம்	கண்டஹஸ்தாய நம:	தட்சிண அஸ்ததலே.	20
ஓம் ஸாம்	ஙம்	ஙப்ரியாய நம:	தட்சிஞங்குல்யக்ரே.	
ஓம் ஸாம்	சம்	சந்த்ரசேகரசாதாய நம:	வாமபாஹௌ,	
ஓம் ஸாம்	சம்	சந்தோமயாய நம:	வாமகூர்பரே	
ஓம் ஸாம்	ஜம்	ஜகத்புவே நம:	வாமமணிபந்தே.	
ஓம் ஸாம்	சம்	சஷகேதுசிதே நம:	வாமஅஸ்ததலே.	25
ஓம் ஸாம்	ஞம்	ஞானதாய நம;	வாமாங்குல்யக்ரே.	

ஓம் ஸாம் டம் டங்கஹஸ்தாய நம:	தட்சிணோருமூலே.	
ஓம் ஸாம் டம் டரூபாய நம:	தட்சிணசானுனி.	
ஓம் ஸாம் டம் டம்பாய நம:	தட்சிணசங்காயாம்.	
ஓம் ஸாம் டம் டக்காப்ரியாய நம:	தட்சிணபாததலே	30
ஓம் ஸாம் ணம் ணகம்யாய நம:	தட்சிணபாதாங்குள்யக்ரே.	
ஓம் ஸாம் தம் தத்வரூபாய நம:	வாமோருமூலே.	
ஓம் ஸாம் தம் ஸ்தவிஷ்டகாய நம:	வாமசானுனி.	
ஓம் ஸாம் தம் தண்டபாணயே நம:	வாமசங்காயாம்.	
ஓம் ஸாம் தம் தநுஷ்பாணயே நம:	வாமபாததலே.	35
ஓம் ஸாம் நம் நகரந்த்ரக்ருதே நம:	வாமபாதாங்குள்யக்ரே.	
ஓம் ஸாம் பம் பத்மஹஸ்தாய நம:	தட்சிணபார்ச்வே.	
ஓம் ஸாம் பம் பணிபுக்வாஹநாய நம:	வாமபார்ச்வே.	
ஓம் ஸாம் பம் பஹுளாபுத்ராய நம:	ப்ருஷ்டே.	
ஓம் ஸாம் பம் பவாத்மஜாய நம:	நாபௌ.	40
ஓம் ஸாம் மம் மஹாஸேநாய நம:	ஹ்ருதயே.	
ஓம் ஸாம் யம் யஜ்ஞமூர்த்தயே நம:	முகே-	
ஓம் ஸாம் ரம் ரமணீயாய நம:	கண்டே.	

ஓம் ஸாம்	லம்	லம்போதரார்நுஜாய நம:	குட்சௌ.	
ஓம் ஸாம்	வம்	வசத்புவே நம:	உரசி.	45
ஓம் ஸாம்	சம்	சரவணோத்பவாய நம:	தட்சிணகட்சே.	
ஓம் ஸாம்	ஷம்	ஷண்முகாய நம:	வாமகட்சே.	
ஓம் ஸாம்	ஸம்	ஸர்வலோகேசாய நம:	சிச்னே.	
ஓம் ஸாம்	ஹம்	ஹராத்மஜாய நம;	குஹ்யே.	
ஓம் ஸாம்	ளம்	ளகுளேச்வராய நம:	தட்சிணவாமபுஜயோ:	50
ஓம் ஸாம்	க்ஷம்	க்ஷமாநேத்ராய நம:	வ்யாபகாஞ்சலி:	

ஸுப்ரமண்யமாத்ருகாந்யாஸம் முற்றிற்று.

பாண்டியன் அச்சகம், சிதம்பரம் '53



ಶೃಂಗೇರಿ ಶ್ರೀ ಆದಿಶಂಕರಾಚಾರ್ಯರ
[illegible]

உ

சிவமயம்.

ஸ்ரீ தோடகாசார்யர் வடமொழியிலியற்றிய

ஸ்ரீ சங்கரகுரு அஷ்டகம்.

இஃது

திருவண்ணமலை ஈசானிய மடம்

ஸ்ரீ நடேச ஞானதேசிக சுவாமியவர்களால்

மொழிபெயர்க்கப்பட்டது.

சிதம்பரம் கோ. சித. மடாலய வெளியீடு.

உ

ஸ்ரீ சங்கரகுரு அஷ்டகம்.

வெண்பா

படித்தறிந்த நூலனைத்தாம் பாற்கடலே வேதந்
தொடுத்தபொருட் செல்வமே தூய்தா—மடிப்பூ
தனைக்குறிக்கொண் டேனுளத்திற் சங்கரப்பே ரைய
வெனக்குப் புகலா யிரு.

இதன் பொருள்:— அறியப்பட்ட சர்வசாஸ்திர ரூப அமிர்த சமுத்திரத்தையுடையவரே மகத்தாகிய உபநிஷதங்களால் பிரதிபாதிக்கப்பட்ட அர்த்தமாகிய நிதியையுடையவரே (தங்களுடைய) நிருமலமாகிய திருவடிகளை (நான் என்) ஹிருதயத்தில் தியானஞ் செய்கின்றேன் ஹேசங்கர தேசிக (தாங்கள்) எனக்கு அடைக்கலம் ஆவீராக. (1)

வெள்ளமா நூலை விரித்தவுண்மை யாணையுளாய்
கள்ளப் பிறவிக் கடலில்வருந்—துள்ளத்

தனேக்கா வருட்கடலே சங்கரப்பே ரைய
வெனக்குப் புகலா யிரு.

(இ—ள்.) கிருபாசமுத்திரமே செய்யப்பட்ட சர்வ சாஸ்திரங்களின் தத்துவ விதியை (உண்மை ஆணையை) உடையவரே சம்சாரசமுத்திர துக்கத்தால் துக்கிதமான ஹிருதயத்தோடு கூடிய என்னை இரக்ஷிப்பீராக. ஹேசங்கரதேசிக (தாங்கள்) எனக்கு அடைக்கலம் ஆவீராக. (௨) ௯

தன்னறிவி ஞராய்விற் றக்க திருவுளத்தோய்
நின்னாலே நல்லோனாய் நிற்பனரன்—முன்னேன்
றனக்குளஞா னத்தையருள் சங்கரப்பே ரைய
வெனக்குப் புகலா யிரு.

(இ—ள்.) ஆத்மஞான விசாரணையில் அழகிய புத்தியையுடையவரே தங்களால் ஜனங்கள் நல்லோர்களாக ஆவார்கள் (தாங்கள்) ஈஸ்வரஜீவர்களின் விவேக

ஞானத்தை அருள்செய்வீராக. ஹே சங்கரதேசிக(தாங்கள்) எனக்கு அடைக்கலம் ஆவீராக. (3)

சிவனேதா னென்றெனது சித்தத்தி லன்பு
தவநன்ரு யுண்டாயிற் றன்றே—பவவா
தனைக்கடலை நீக்குகிற்பாய் சங்கரப்பே ரைய
வெனக்குப் புகலா யிரு.

(இ—ள்.) தாங்கள் சாக்ஷாத் சிவசொரூபமே என்று என்னுடைய சித்தத்தில் சந்தோஷத் தன்மையானது நிரந்தரம் உண்டாயிற்று (தாங்கள்) என்னுடைய மஹா மோஹசமுத்திரத்தை நிவிர்த்திப்பீராக. ஹே சங்கரதேசிக (தாங்கள்) எனக்கு அடைக்கலம் ஆவீராக. (4)

நின்னடிநற் காட்சிநசை நீண்டபெரும் புண்ணியங்கள்
முன்னமிழைத் தோர்க்கே முளைக்குமா—லின்ன

றனக்கிடனு மென்னைக் சங்கரப்பே ரைய
வெனக்குப் புகலா யிரு.

(இ—ள்.) தங்களுடைய திருவடி தரிசனத்தில் பிரியமானது அநேக பிரகாரமான சுகிருதங்கள் செய்யப்பட்டிருப்பின் உண்டாகும் மிகுந்த துக்கியாகிய இந்தவென்னை (தாங்கள்) இரக்ஷிப்பீராக. ஹே சங்கரதேசிக (தாங்கள்) எனக்கு அடைக்கலம் ஆவீராக. (5)

பெரியா ருலகோம்பப் பெற்றாராய் மேனி ௬
சரியாநின் றூர்மறைவாத் தானே—தரையாந்
தனக்கிரவி போலொளிர்வாய் சங்கரப்பே ரைய
வெனக்குப் புகலா யிரு.

(இ—ள்.) மஹாத்மாக்கள் ஜகத்தை இரக்ஷிக்கும் பொருட்டுத் தரிக்கப்பட்ட திருவுருவத்தை யுடையவர்

களாய் வியாஜமாக (மறைவு வடிவமாக) சஞ்சரிக்கிறூர்கள் ஹே சங்கரகுரோ (தாங்கள்) இந்த லோகத்தில் சூரியனைப் போல (பிரசித்தமாக ஜகத்குருவென்று) விளங்குகின்றீர். ஹே சங்கரதேசிக (தாங்கள்) எனக்கு அடைக்கலம் ஆவீராக (6)

குரவர் பெரும கொடியேறு கொண்டோய்
சரணடைந்தார் மெய்ப்பொருளே சார்பே—யுரவோர் ௭
தனக்கொப் பெவருமிலாச் சங்கரப்பே ரைய
வெனக்குப் புகலா யிரு.


(இ—ள்.) தேசிகர் தலைவ இடபக்கொடியையுடைய வரே சரணமாக அடைந்தவர்களிடத்துப் பிரியமுடைய வரே தத்துவமாகிய நிதியையுடையவரே தங்களுக்குச் சமத்தன்மை அடைந்த ஒரு நல்ல புத்திமானுமில்லை. ஹே சங்கரதேசிக (தாங்கள்) எனக்கு அடைக்கலம் ஆவீராக (7)

கலையொன்றுங் கல்லேன் கசடறப் பொன்னேன்று
மிலையியல்பா நின்கருணை யெந்தாய்—புலையோன்
றனக்கருளல் வேண்டுமின்றே சங்கரப்பே ரைய
வெனக்குப் புகலா யிரு.

(இ—ள்.) ஹே குரோ என்னுல் ஒரு சாஸ்திரமுங்கூட கசடற அறியப்படவில்லை சொல்ப தனமுங்கூட இல்லை தங்களுடைய சஹஜமாகிய கிருபையை அதிசீக்கிரமாகவே கீழான எனக்குத் தந்தருள்வீராக. ஹே சங்கரதேசிக (தாங்கள்) எனக்கு அடைக்கலம் ஆவீராக. (8)

ஸ்ரீ சங்கரகுரு அஷ்டகம் முற்றுப்பெற்றது.

பாண்டியன் அச்சகம், சிதம்பரம் '53



ಶ್ರೀ ಜಗದ್ಗುರು ಈಗಿನ
ಶ್ರೀ ಚಂದ್ರಶೇಖರಭಾರತಿಸ್ವಾಮಿಗಳು
ಆಹ್ನೀಕ

உ

சிவமயம்.

ஸ்ரீ சந்த்ரமௌலீசாய நம:

ஸ்ரீ சாரதாயை நம:

பகவதே ஜகத்குரவே ஸ்ரீ சந்த்ரசேகர

பாரதீயதீந்த்ராய நம:

ஸ்ரீ பாரதீயதீந்திரர்

தோத்திரப்பாமாலை.

(பன்னிருசெய்யுள்)

சிதம்பரம் கோ. சித. மடாலய வெளியீடு.

சிதம்பரம் ஸ்ரீ வேலன் (பவர்) பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

27—1—1954.

உ

சிவமயம்.

நூன்முகம்.

மலர்தலையுலகில், புண்ணிய பூமியாகிய பரதகண்டத்திலே ஜீவர்கள் தருமார்த்தகாமமோக்ஷமென்னும் சதுர்வித புருஷார்த்தங்களுள் பரம புருஷார்த்தமாகிய மோக்ஷத்தை, பிரஹ்மான்ம ஐக்கிய ஞானத்தால் அடைதற்பொருட்டு, கைலையங்கிரிவாசராகிய ஸ்ரீ பரமேசுரர் சிருங்ககிரியில் துங்கபத்ரா நதிதீரத்தில் சத்திபீடபுரத்தில் மடத்தில் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ யதீந்திர சுவாமிகளாக மானுடத்திருமேனிதாங்கி யெழுந்தருளி யிருந்து அனுக்கிரகஞ் செய்துகொண்டிருப்பது இவ்வுலகம் நன்கறிந்ததே: அத்தகைய சுவாமிகளுக்கு நாளிது விஜயவருஷம் சித்திரைமாதம் கிருஷ்ணபக்ஷத்தில் நடைபெற்ற சஷ்டியப்தபூர்த்தி மஹோத்ஸவத்தில் ஸ்ரீ கோகர்ண க்ஷேத்திரத்தில் கோரக்ஷா பிரஹ்மசர்ய ஆச்ரமத்திலிருக்கின்ற **ஸ்ரீ ஜகத்குரு சங்கரகிங்கரராகிய தெய்வராத வித்வத்சிரோமணியவர்கள்** சுபாஷிதரூப

சுகந்த புஷ்பங்களைக்கொண்டு துவாதசசுலோக வடிவ கவிமாலை தொடுத்துத் திருவடியில் சமர்ப்பணஞ் செய்தனர். அப்பெற்றித் தாய பன்னிரு சுலோகங்களையும் தமிழிலே செய்யுள் வடிவமாகச் செய்யவேண்டும் என்று கோவிலூர் மடாலயம் நமது **ஸ்ரீலஸ்ரீ மஹா சன்னிதானம் சோமசுந்தர ஞானதேசிக சுவாமிகளவர்கள்** சொல்லியதற்கிணங்கி **ஸ்ரீ நடேச ஞானதேசிக சுவாமிகளவர்கள்** மொழிபெயர்த்துப் பன்னிருசெய்யுளாகச்செய்து **ஸ்ரீ பாரதீயதீந்திரர் தோத்திரப்பாமாலை** யென்னும் பெயருமிட்டுத்தந்தனர். இதனை யிவ்வுலகம் ஓதியுணர்ந்து நன்மையடைதற்பொருட்டு அச்சிற் பதிப்பித்து வெளியிட்டிருக்கின்றோம்.

சிதம்பரம்,
25—12—'53.

இங்ஙனம்,
சோம. இராமலிங்கம்.

முதற்குறிப்பு வெண்பா.

உலகெவ் வுலகுக்கு மன்னைமெய் யான
சுருதியந்த முண்மை விருப்ப முணவு
மறைபுகலும் வித்தையுண்மை யாதியா னெஞ்சே
பிறையணிவா ராசி பெறு.

(கு—ரை). பிறையணிவார்=ஸ்ரீ சந்திரசேகர பாரதியதீந்திரசுவாமிகள்

சிவமயம்.

சகுண நிற்குண சொரூப வணக்கம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஈசனைப் பிறவி யாதிவிக் கிரியை
யிலாதவீ சானனை யுலகி
னுசிற யனுமாய்த் தானது பெருத
வற்புத விக்கிர மனுமாய்
வேசறு பாதத் துவனுமாய்ப் பிரம
வித்தியா தேவதை யுமையா
ணேசனு மாய போதவா னந்த
நிறைகட லிடைநிதம் படிவாம்.

(குறிப்புரை) விக்கிரியை = விகாரம். (மாறுதல்) அது = ஆசிரயம்,
விக்கிரமன் = திறமையுள்ளவன்,

சிவமயம்.

ஸ்ரீ கணேசாய நம:

நூல்

[அவதாரிகை.]

[ஸ்ரீ பகவற்பாதர் வசித்த சிருங்ககிரி சத்திபீடபுரம் ஸ்ரீ சந்திரமௌலீசர் முதலாயினோர்க் கிடமாயிருத்தல்.]

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

(௧) உலகரருச் சனைசெய்யும் பகவற் பாத
ருயர்குரவர் துறவரச ருறைந்த தூய
மலையிறைதஞ் சிருங்கைதனிற் சத்தி பீட

மன்னுபுர மதிலொளிர்சா ரதையாந் தேவி
நிலவணிசெஞ் சடைமுடியர் பகவற் பாதர்
நிமலசுரே சுரரொடுபா ரதிப்பேர் மேவி
யிலகுயதி சந்திரசே கரரா மீச
ரிணையில்சொரு பத்தென்று மிலங்கு கின்றார்.

(கு—ரை.) பகவற்பாதர் பெயர் இரு முறை வந்தது, முன் அநுக்கிரகஞ் செய்து கொண்டிருந்த திருமேனியைக் குறித்தும், இப்போது ஸ்தாபனஞ் செய்துள்ள திருவுருவத்தைக் குறித்துமென்க. (1)

[ஸ்ரீ சந்திரசேகரரவதரித்தல்.]

(௨) எவ்வுலகுக் குங்குருவாய் முதல்வ ரான
விறைவனார் பிறை முடித்த பகவ னார்தாஞ்
செவ்வியயோ கந்தவமே கல்வி மேன்மைச்

செல்வமுறீஇப் பிரஞான பானு வாகி
யெவ்வமில்கம் பீரசின்னஞ் சிரத்தை சாந்தி
யெனுமிந்து கலைதெளிவாம் பிரம நிட்டை
தவ்விலுயர் வித்தையொடிங் கவத ரித்தார்
சந்திரசே கரயதிப்பேர் சார்ந்து மன்னே.

(கு-ரை.) செவ்வியயோகமும், தவமும், கல்வியும், மேன்மையுமாகிய செல்வத்தையுற்று என எண்ணும்மைகளையும், ஆகிய என்னும் பண்பையும் விரித்துக்கொள்க. கப்பீரசின்னம் = ஆழ்ந்த கருத்தைக் காட்டும் முகக்குறி முதலியன, தெளிவா மிந்துகலை தெளிவாம் பிரமநிட்டை யெனக்கூட்டுக. உயர்வித்தை = ஸ்ரீ வித்தை (மஹா வித்யா விசேஷம்.) (2)

—:—

[மாதாவின் பிரபாவமும், இம்மூர்த்தியின் பிரபாவமும்.]

(௫) அன்னையெவ ணற்செல்வ யோகத் தோற்ற
வடைவினருந் தவத்திநெடும் வருத்தத் தாலே
தன்னுளியாற் றன்பதியின் னருளா லீன்றுள்
சகற்குருவைப் பகவதியப் பெரிய நல்லா
ளுன்னனனி செயத்தக்கா ளன்னை மேன்மை
யுலகினிலை பெறச்செய்த குரவர் வேந்தர்
தந்நிகரில் சந்திரசே கரய தீசர்
சந்ததஞ்சேர் வுறத்தருவர் சனவுள் ளத்தே.

(கு—ரை.) நற்செல்வ யோகத்தோற்ற அடைவின் = சௌபாக்கிய யோக வுதயத்தால், ஈண்டு நற்செல்வமென்றதும், மூலத்தில் சௌபாக்கிய மென்றதும் மகவைக் குறித்து நின்றன. தம்பொரு ளென்ப தம்மக்கள் என்பது தமிழ் மறையாதலின், யோகம் = அடையப்படாததனடைவு, இன்னருள் = இனிய கிருபை. (3)

[ஸ்ரீ பகவற்பாதர்தாம் இம்மூர்த்தி யெனல்.]

(௫) மெய்யான பிரமவித்தை வலியாற் றொய்தம்
விலக்குவதிற் பிரமான்ம தத்து வத்தி
ஊனயாத கருத்துடைய சித்தாந் தத்தை
நாட்டுதலின் முதல்வராம் பகவற் பாதர்
மெய்யாக விப்பொழுது மதனோ டுற்ற
மெய்த்தவத்தாற் பிரமானு பவத்தின் மேன்மை
பொய்யாத சந்திரசே கரராய் நீத்துப்
புவிபோற்றத் திகழ்கின்றார் யோகத் தாலே.

(கு—ரை.) தொய்தம் விலக்குவதில் = அத்வைதத்திலும், பிரமான்ம தத்துவத்தில் = பிரஹ்மரூப ஆன்மவத்துவிலும், நையாதகருத்துடைய = இயல்பாகவே அபிப்பிராயமுள்ள, சித்தாந்தத்தை = உபநிடதக்கொள்கையை, நாட்டுதலில் = ஸ்தாபனஞ்செய்தலில், முதல்வராம் = தலைவராக விளங்கிய, அதனோடுஉற்ற = சித்தாந்

தத்தை நாட்டுதலோடுற்ற, நீத்து = மூவேடணையும் விட்டு, (யதியாய் என்று தாற்பரியம்.) (4)

[வேதாந்த விசார முதலியவற்றுல் தத்துவஞானுநிகள்.]

(ரு) சுருதியந்த மாதிவிசா ரத்தான் மெய்யாய்த்
துலங்குபொருள் சமாகிதரா யறிந்தவ் வந்தங்
கருதான்ம பிரமமாம் வேத சாரங்
கண்டுளத்தா னன்குமுனி வரரா யுண்மை
சருவநரர்க் கும்முணர்த்திப் பகவற் பாதர்
தந்திடுகொள் கையையீந்தே தமது வாக்கான்
மருவினிய சந்திரசே கரய தீசர்
மகிழ்சாந்தர் மனிதருள மன்னத் தக்கார்.

(கு-ரை.) சமாகிதராய்=ஏகாக்கிரசித்தமுடையவராய் அவ்வந்தங்கருது ஆன்ம பிரமமாம் உண்மை வேதசாரம் உளத்தால் நன்கு கண்டு

முனிவராய்த் தமது பகவற்பாதர் தந்திடுகொள்கையைத் தமது வாக்கால் சருவநரர்க்கு முணர்த்தியிருந்து மருவுகின்ற இனிய சந்திரசேகரயதீசர் என அன்னுவய முதலியன செய்க. சருவ நரர்க்கும் முணர்த்தி என்பதில் மகரமெய் விரிந்தது விரித்த லென்னும் செய்யுள் விகாரமென்க. தமது என்பதை, பகவற் பாதரோடும் கூட்டுக. முனிவரர்=மனனசீலருள் சிரேஷ்டர், (5)

[மகாதேவ ரூபம் வித்தை, மறை இம்மூர்த்தி முகங்களால் சருவாத்தும ரூபத்தால் விளங்குதல்.]

(கூ) உண்மையறி வின்பமிர்த வபய சார
வுள்ளுயிராய்த் தொல்பிரம பரமாய் நிற்குந்
திண்மைபெறு மனந்தமத்து விதம ஞஇ
சிவமசல பூர்ணமகா தேவ ரூபம்
தண்மைதரு வித்தைமறை முகங்க ளாலே
சற்புருடர் பிரமானு பூதிக் காக

வண்மைசெறி சந்திரசே கரர்மு கத்தான்
மன்னிவிளங் குகவனைத்தாம் வடிவத் தாலே. (6)

(கு—ரை.) வித்தை = பரதேவதை, மறை = சுருதி, முகம்=வாக்கு,

[விடய வெற்றி முதலியவை.]

(எ) விருப்பமுத லியவிடய மனைத்தும் வென்று
விமலவவ தூதசித்த முனிவ ராயிங்
குருப்பலசே ருலகமுத லெல்லாந் தாண்டி
யுள்ளேதா மாகமகா ஞானி யாகி
யருப்பகவுன் மத்தரென வெளியி லேநின்
றந்தோசா மியத்திதியி லபய ராகித்
தருப்பமிலாச் சந்திரசே கரய தீசர்
தமிலொடுங்கிச் சங்கரராய்க் காணப் பெற்றார்.

(கு—ரை.) அவதூதர்=உலகப்பற்றுக்களை முற்றிலும் துறந்தவர், அவதூத என்னும் பதத்திலுள்ள எழுத்து நான்கிற்கும் பொருள் அடியில் வருமாறு.

அ=அக்ஷரத்வம், (அழியாததன்மை)

வ=வரேண்யத்வம், (சிறந்த தன்மை)

தூ (வர்க்கத்தின் நான்காம் எழுத்து) = தூதசம்சாரபந்தனம், (தள்ளப்பட்ட பிறவிக்கட்டு) பிறவிக்கட்டைப் போக்கிய நிலை யென்பது கருத்து,

த=தத்துவமஸியர்த்தஸித்தத்வம், (தத்துவமசிப் பொருள் அடையப்பெற்ற தன்மை,) இந்நான்கினையு முடையவர் அவதூதர்.

இந்தப் பொருளையுடைய சுலோகம் சப்தார்த்த சிந்தாமணியிலும் ஸ்ரீரங்கம் வாணிவிலாசத்தில் அச்சிட்ட சமஸ்கிருத அகராதியிலும், உள்ளது. இதுவே அவதூத கீதை எட்டமத்தியாயத்தில் 6-7 8-9 இலக்கமுள்ள சுலோகங்களால் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. விருப்பமுள்ளோர் ஆண்டுக் காண்க. சித்தர் =

முயற்சியின்றிப் பிறப்பாலேயே தரும ஞான வைராக்கிய ஐசுவரிய விசேடங்களையடைந்தவருமஉண்மையுணர்ந்தவருமாவர், இது கீதாபாஷ்யத்திலும் மதுசூதநீ வியாக்கியானத்திலுமுள்ளது. அ. 10, சு. 26, அருப்பகம்=குழந்தை, சாமியத்தியில்=எங்கும் சமமாயிருக்கின்ற சொரூப நிலையில், அபயராகி = (மாத்தியமிகர் பயமுறுவது போல்) பயமுருதவராய், (7)

[மெய்யுணர்வால் உணவாதிகளின்
நினைவின்மை முதலியவை.]

(அ) உணவுறக்கம் விளையாட்டு விடய மாதி
உணர்வாலெல் லாமறந்துள் வெளியி லென்றுந்
துணவுதலில் சாமியத்தி னோடு தம்மிற்
றங்குபிரீ தியிற்பிரம பூரா ணத்தே
யுணமிறநிங் கேவிழித்துச் சத்து வத்தா

லெவ்வுயிரும் விழிப்பித்துண் மையிற்ச மாதி
யணவிநிறை சந்திரசே கரய தீச
ரகிலத்தே முத்தான்மா வாகி நின்றார்.

உணர்வால் உணவுறக்கம் விளையாட்டு விடயமாதி யெல்லாமறந்து எனவும், சத்துவத்தால் எவ்வுயிரும் உண்மையில் விழிப்பித்து எனவும் அன்று வயஞ்செய்க.

(கு—ரை.) உள்ளிற்சாமியம் = பிரகாச, பிரவிருத்தி, மோஹங்களில் ஸமத்தன்மை, வெளியிற்சாமியம்=பகை, நட்பு முதலியவற்றில் ஸமத்தன்மை, இங்கே=சொரூபத்தில். (8)

[வைதிக தருமசம்ரக்ஷணத்தை மேலாகக்
கொண் டொழுகுதன் முதலியவை.]

௧) மறைபுகலு மறங்காக்கு மனத்த ராயம்
மறையறங்கட் டளையிடுவோர் குரவ ராகி

நிறையுயிர்மேற் சமநோக்கா லருண்மேற் கொள்ளு
நினைவினராய் நிக்கிரக சமர்த்த ரேனும்
பொறைமேவிச் சித்தரா யாசை நீத்த
புவனமாண் டிப்புவனங் கடந்தே யெங்கு
முறையான்ம சுகக்கடலிற் படிந்து வெற்றி
யுறுகின்றார் சந்திரசே கரர்தம் முள்ளே.

(கு—ரை.) மறையறம் கட்டளையிடுவோர் = அரசர், நிக்கிரகசமர்த்த ரேனும் சமநோக்கால் நிறையுயிர்மேல் அருண்மேற்கொள்ளும் நினைவினராய் என அன்னுவயஞ் செய்க. ஆசைநீத்தபுவனம் = வைராக்ய சாம்ராஜ்யம். (9)

[ஸ்வாராஜ்ய யோக வுதயத்தினால் ஸ்ரீ வித்யாபூஜித சார்வபௌம யதிராஜத் தன்மை முதலியவை.]

(௧௦) வித்தையினாற் பூசிதநற் சார்வ பௌம
வேந்தர்துற வியராய்த்த மரசின் யோக
மெத்திவரு தலினுலகர் நலத்திற் கோங்கும்

விறலினராய்ச் சுதந்திரராய்ச் சுராட்டாய் முற்றுஞ்
சுத்தபரி பூரணராய்த் துலங்கு கின்றூர்
துன்றுமகத் திலக்கியத்தில் வெளிநோக் கஞ்சேர்
சத்தியமா சாம்பவிமுத் திரையாற் றம்முட்
சந்ததமுஞ் சந்திரசே கரய தீசர்.

சந்திரசேகரயதீசர் தம் அரசின்யோக மெத்தி வருதலின் வித்தையினுற் பூசிதநற்சார்வபௌம துறவியர் வேந்தராய் உலகர் நலத்திற் கோங்கும் விறலினராய் முற்றுஞ் சுதந்திரராய்ச் சுராட்டாய் துன்றுமகத்திலக்கியத்தில் வெளிநோக்கஞ்சேர் சத்தியமாசாம்ப விமுத்திரையால் தம்முள் சந்ததமுஞ் சுத்தபரிபூரணராய்த் துலங்கு கின்றூர் என அன்னுவயஞ் செய்க.

(கு—ரை.) தம் அரசின் யோக மெத்தி வருதலின்=ஸ்வாராஜ்யத்தை யடைவிப்பதாகிய யோகவுதயத்தால், வித்தையினுல்=பர அபர வித்தையிரண்டையு மடைந்திருத்தலால், பூசித = உலகத்தாரால் பூஜிக்கப்பெற்ற, சார்வபௌம நற் றுறவியர்வேந்தராய் = சர்வ பூமிக்கும் நல்லயதிராஜராய், சுராட்டு = தம்மாலேயே விளங்கு

கின்றவர், (தானாகவிளங்குகின்றசூரியன் அல்லது இந்திரிய அபேக்ஷையின்றி யியல்பாகச்சித்தித்துள்ள ஞானமுடையபரமேசுரர்) என்னுமிப்பொருள் சப்தார்த்தசிந்தாமணியிலுள்ளது, சாம்பவீமுத்திரை=சம்புவுக்குப் பிரியமான அல்லது சம்புவின் தோற்றத்தை யுண்டாக்குவதான அடையாளம், இம்முத்திரையி னிலக்கணமும் பயனும் அடியில்வரும் அடயோகப்பிரதீபிகை மொழிபெயர்ப்பு வெண்பாக்களாலுணர்க.

உள்ளாரு தாரத்து ளோரிலக்கி யத்திலிமை
கொள்ளா வெளிவிழிப்புக் கொள்ளாநோக்—கொள்ளியதாய்த்
தங்குமிது சாம்பவீ முத்திரைவே தம்பலநூ
லெங்குமத னைக்காத்த வென்று.

வேதம் பலநூல் அதனையெங்கும் என்று காத்த=வேதங்களும், பல சாத்திரங்களும் அந்தச்சாம்பவீ முத்திரையை யெவ்விடத்தும் அங்கீகரித்துக் காப்பாற்றின,

பஃறொடை வெண்பா.

அனாகதத்து ருத்திரனி லன்றியான் மாவிற்
றனாதுபவ னத்தொடுசித் தந்தா னனதொடுங்கும்

காலத் தசைவில் கருமணிநோக் கால்வெளி
ஞாலத்தைக் காணினுங்கா ஞன்யோகி சீலனுக்குச்
சம்பவிக் கின்றதன்றே சாமபவியிம் முத்திரை
நம்பன் குருவருளா னண்ணினது சம்புவின்
சூனியா சூனியந் தோயாப் பரம்பதம்
வானினொளிர் கின்றதது வத்து.

அது நண்ணின் = அந்தச்சாம்பவிமுத்திரை வாய்க்கின்,

இதுவுமது

மற்றொன்றிற் செல்லா மனத்தன்மா யோகியொழி
வற்றின்ப மாவுள் ளிலக்கியத்தைத் தெற்றெனவெந்
நோக்கா லிமைத்தல் விழித்தலின்றி நோக்குவனந்
நோக்கமாஞ் சாம்பவீ முத்திரைமுந் நோக்கமுளோன்
காத்தனனீ தாகமத்திற் கண்டு கருணையா
னீத்தவர்க்குச் சித்தலய நேர்வித்துக் காத்திரமில்
வீடளிக்கு மீதின்ப வீடுவிருப் புள்ளோர்க்குக்
கூடு மரியதெனக் கொள்.

மற்றும் வருவனவற்றுற் காண்க. (10)

[சத்திய இதவுபதேச வாயிலாகக் கவலை ரூப துன்ப நீக்கம் செய்கின்றவரே என விளித்துத் தண்ணளி செய்து காப்பாற்ற வேண்டுமெனல்.]

(௧௧) உண்மைநல வுபதேச முகத்தாற் றுன்ப
மொழிவிப்பீர் கடவுளே யிறைவ ரேநீர்
தண்மையிரக் கம்பிரிய மகிழ்ச்சி சார்ந்து
சந்ததநன் கருள்விழியா லிவனைப் பார்த்து
வண்மையுறு திருவடியே தஞ்ச மென்று
வந்தடைந்து நம்புதலை மனத்தோ டுற்ற
எண்மையனைத் தமதுதெய்வ ராதன் றன்னை
யென்றும்யதி சந்திரசே கரரே காக்க. (11)

[சிருங்ககிரியின் பரமபாவனத்தன்மையில் காரணமும் சிவஞான சுகசம்பத்து நிமித்தம் இம்மூர்த்தியுபாசனையும்]

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

(௧௨) ஆதிபக வற்பாதர் சுரேசுவர ரருச்சனைசெ
யம்மை வாணி
சோதிமதி சூடரனு ரிருத்தலிற்றாய் தாஞ்சிருங்கைத்
தொன்ம டத்தே
நாதரடி யவராகி யாதரவி லின்பசிவ
ஞான நண்ண
வோதியுள சிரத்தையாற் சந்திரசே கரயதியை
யுபாசிக் கின்றோம். (12)

குருவணக்கம்.

வெண்பா.

குருவே யயன்மால் குருவேமா தேவன்
குருவே தனைத்தருஞ்சூற் கொண்டல்—குருவேநல்
வைப்பா நவநிதியவ் வள்ளலை யன்பினுபா
சிப்பாந் தொழுதுதுதி செய்து.

(கு—ரை). சூற்கொண்டல்=கருக்கொண்ட (மழை) மேகம், (மேகம் போல்வரென்பது கருத்து) நல்=நினைக்குந்தோறும் இன்பத்தைத் தருகின்ற, வைப்பாம் = நிக்ஷேப (புதையல்) மாகிய, நவநிதி= குபேரனுடைய கச்சபநிதிமுதலிய ஒன்பதுநிதிபோன்று நினைக்குந் தோறும் இன்பத்தைத் தருகின்றார், நலமென்பது அம் குறைந்து நல் என நின்றது.

ஸ்ரீ பாரதீயதீந்திரர் தோத்திரப்பாமாலை முற்றுப்பெற்றது.

சுபமஸ்து.

இ∴து, வல்லநாடு, க. மு. சங்கரசாஸ்திரிகள் இயற்றியது.

பத்தர்களி லிவனமக்குத் தமன்சகல நூலுணர்விற் பனன்மேலாம்வி
ரத்தனெழிற் சிவகுருவென் பவனென்னு மருத்தமதை நண்ணுநன்னு
மத்தனெனக் கடவதென்றோர்ந் தெவன்சுதனு யவதரித்தான் வளமார்சிங்கை
அத்தகைய சங்கரனுஞ் சற்குருவை யனுதினமும் வணங்குவோமால்.

ஒத்தகுரு டனைச்சேர்மற் றோர்குருட னெனத்துர்மத ருபதேசத்தாற்
பித்தர்களாய்த் தன்மதம்விட் டயன்மதத்திற் புகுந்துலகம் பிரலாபிக்கச்

சித்தமுவந் தவதரித்திங் கெவனதனை யிரக்ஷித்தான் சிருங்கைவாழும்
அத்தகைய சங்கரனுஞ் சற்குருவை யனுதினமும் வணங்குவோமால்.

வித்தகமெய்க் குருசரண மூலமலான் மனிதருக்கு வேறுதஞ்சம்
இத்தரையி லிலதெனலை யாவருக்கு முதாரணமா யியம்பல்போல
மெத்தமகிழ்ந் தப்பெயர்சேர் திவ்யதலயாத்திரையை விரும்பிச் செல்லும்
அத்தகைய சங்கரனுஞ் சற்குருவை யனுதினமும் வணங்குவோமால்.


மத்தகநேர் தனவுமையோ டிருந்துபதே சஞ்செயின் மாந்தர்மாவ
னத்தமுமில் விடுதவு ஞானமதை யோர்சிறிது நம்பாரென்றே
வித்தமுத லாமனைத்துந் துறந்தயதி வேந்தெனவந் துற்றுன்சிங்கை
அத்தகைய சங்கரனுஞ் சற்குருவை யனுதினமும் வணங்குவோமால்.

எத்தவருந் தொழுதிடவவ் வடிவமதா யடிக்கடியவ் விணையிலாத
சுத்தவுயர் தானமதி லுற்றுமறை நான்கினையுந் துலங்கச்செய்து
புத்தமுதை நேர்சுருதி முடியிலொளிர் பவனெவனற் சிருங்கைவாழும்
அத்தகைய சங்கரனுஞ் சற்குருவை யனுதினமும் வணங்குவோமால்.

உ

சிவமயம்.

சிருங்ககிரி ஜகத்குரு



ಶ್ರೀಂಗೇರಿ ಜಗದ್ಗುರು ಅಭಿನವ ವಿದ್ಯಾತೀರ್ಥರೂ

உ

சிவமயம்.



|| ஈம் ஓம் ஸ்ரீ: ||

ஸ்ரீமத்பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்யவர்ய: ஸ்ரீஜகத்குரு:॥
ஸ்ரீமதபினவ வித்யாதீர்த்தயதீந்த்ர:

★ சிரம் விஜய தேதராம். ★

பரமஹித சுநீத்யா நந்திநீ ஸம்விதாநா
பரமரஸ ஸுபூர்ணாநந்த ஸந்தோ ஹநஸ்ரீ:॥
ஜகதபிநவ வித்யாதிர்த்த யோகீந்த்ர யோகான்
னினயது நிஜசாந்த்யை சாரதா யோகபூமிம் (க)

வேறு

ஓம்-ஓமித்யேகாக்ஷராத்ம ப்ரணவபரதர பிரஹ்ம ஸந்மாத்ரபூத:ஸத்யக்ஞானம்ருதாத்மா ஸகலஸுககர: ஸச்சிதானந்த ரூப:॥ ஸர்வேஷாம் ஸம்ப்ரணேதா

ஸ்வயமிஹ விலஸந் பூருஷ: ஸாப்ரஸந்ந: பாயாத் ஸர்வத்ர பூர்ணே ஜகதகிலமிதம் சங்கராசார்யவர்ய: (உ)

ஈம்-ஈமித்யேதத் ஸ்வராத்ம ப்ரமித ரஸ தம ப்ரஹ்ம ஸம்விந்மயாத்மா ஸர்வக்ஞ: ஸர்வசக்தி: ஸகல புவனப்ருத் பூர் புவ:ஸ்வர் விபூதி:|| விக்ஞாநாநந்த வித்யாரஸமபிவிதரந் பத்ரக்ருத் ருத்ரமூர்த்தி: பாயாத் ஸர்வத்ர பூர்ணே ஜகதகிலமிதம் சங்கராசார்யவர்ய: ௩

ஶ்ரீமத் ஸர்வேஸ்வரோஸௌ ப்ரியதம உதிதோ விஸ்வபூதாதி ஸம்ராட் விஸ்வப்ராஜ்ஞோ விதாதா பரிவித ததம: ஸார்வபௌம: பரேச:|| ஸத்வித்யா வேத தர்மாப்யுதய திநகரோ ஞான விக்ஞானபூமா பாயாத் ஸர்வத்ரபூர்ணே ஜகதகிலமிதம் சங்கராசார்யவர்ய: ச

பூர்ணே ப்ராபஞ்சிகேஸ்மின் ஸகலவிதசுகே பார மார்த்தே பரஸ்மிந் ஸர்வார்த்தாநாம் விதாத்ரீசுப விஜயகரீ பாக்யதாலங்க்ருதிஶ்ரீ:|| ஸர்வாங்கை: ஸம்ப்ர பூர்ணப்ரணத பயஹரீ ரிக்யஜு: ஸாம மூர்த்தி: வித்யாத்மா வேததத்வம் திசது பகவதி சங்கராசார்ய யோகாத். (ரு)

தேஜோபன்னை: ஸஸத்வைர் விபுதபுதஜனைர் தர்மவித்யா யசோபி: ஸம்பன்ன: ஸர்வரத்னைர் வஸுபி ரபிஜனைர் பூதிபி: ஸர்வபூதை:॥ ஸ்ரீவித்யா வேததர்மாப்யுதய சுகக்ருதே லோக ஸௌக்யாபி விர்த்யை பூயாத் தர்மப்ரதிஷ்டா விஜயசுககர: சங்கரா சார்யவர்ய: (சு)

ஸ்ரீ–கோ–பூ-வேத–தேவ–த்விஜ–குரு- ஜனதா – தர்ம–வித்யா–தபோபி: ச்ரத்தா–ப்ரக்ஞா–விவேகைர் பகவதவகதேர் புத்தி யோகாதி சித்தே:॥ ஆசந்த்ரார்க்கம் தனோது ப்ரபு ரமலயச: ஸர்வபாக்யை: ஸம்ருத்தம் பாயாத் தத்வோபதேசாத் குருரிஹஜகத: சங்கரா சார்யவர்ய: (எ)

இந்த்ரோ வர்ஷத்வபீஷ்டம் ப்ரதிபலதுமஹீ ஜீவனுதாரபூதா தோக்த்ரீ தேனுர்ததாது ப்ரதிதின மம்ருதம் விஸ்வசஞ்சீவனூர்த்தம்॥ ஆசார்யோ ந:ப்ரசாஸ்தா பரம ஹிததமோ விஸ்வவித் விஸ்வசக்தி: பக்த்யை புக்த்யை விமுக்த்யை ப்ரபவது பகவான் சங்கரா சார்யவர்ய: (அ)

விஸ்வேஷாம் ப்ராணினும் ஸ்வ:பரமசுககரோ நைஷ்டிகோ ப்ரஹ்மநிஷ்ட: ஸர்வை: ஸம்பூஜநீயோ ஜனசுகநிரத: ஸ்வாஸ்ரய: ஸஜ்ஜநாநாம் || வித்யா ஸௌஜன்ய யோகாத் சுக்ருதிபி ரநிசம் சங்கராசார்ய வர்ய: ஸம்சேவ்யோ தைவராத ப்ரமுதிதகவிதா ஸ்ரக்த ராஸ்ரக்தரோயம். (௯)

வேறு

ஸத்குரு ப்ரஸாத லப்த பத்ய புஷ்ப மாலிகா சங்கரார்ய பூஜ்யபாதுகார்பிதாத்ம மௌலிகா|| விஸ்வவித்சுதா ப்ரபூர்ண வேத சந்த்ரிகாலிகா தைவ ராதஹ்ருத் ப்ரபுல்ல வாக்ப்ரசூந மல்லிகா, (௧௦)

வேறு

இத்யேஷா வாங்மயீ ஸேவா வேதவாகுப ப்ரும்ஹிதா|| ஜகத்குரு ப்ரஸாதார்த்தம் தைவராதேன ஸத்க்ருதா (௧௧)

சமர்ப்பணம்

ஸ்ரீ சிருங்கேரி ஸ்ரீ ஜகத்குரு
சரணாரவிந்தயோ:
விஜய ஸம்வத்ஸரே,
சைத்ர கிருஷ்ணே.

இத்யாதி விக்ஞாபயிதா
பகவதோ விதேய:
தைவராத: கஜாநந ஸர்மா
கோரக்ஷா ப்ரஹ்மசர்யாஸ்ரம:,
கோகர்ண, ஜில்லா காரவார.

பாண்டியன் அச்சகம், சிதம்பரம் '53

உ
சிவமயம்.


சிருங்ககிரி

ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த பாரதி சுவாமிகள் வணக்கம்

எழுசீர்விருத்தம்.

உத்தம கைலை மலைக்கிறை யவனு
ருமையொரு பாகமே முதலா
மெத்திய வடிவை மறைத்துல குணர்வு
மேவமா நுடவுருப் புனைந்தே
சத்திய தவத்தோர் சார்ந்திடுஞ் சிருங்கை
தனில்வள ரபிநவ பதஞ்சேர்
சுத்தமெய்ஞ் ஞான வித்தியா தீர்த்த
தூயமா தவன்பதந் தொழுவாம்.

இஃது
திருவண்ணாமலை ஈசானிய மடம்
ஸ்ரீ நடேச ஞானதேசிக சுவாமியவர்களால்
இயற்றப்பட்டது.



உ. கோவிலூர் ஆறுவது மடாதிபதி.

ஸ்ரீ அண்ணாமலை ஞான தேசிகசுவாமிகள்.

உ

சிவமயம்.

பாண்டி நாட்டிலுள்ள

சமிவன க்ஷேத்திரமென்னும்

கோவிலூர்

ஸ்ரீமத்

அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகள்

தோத்திரம்.

பொருளுதவியாளர் :

க. கோவிந்தசாமி படையாச்சி,

வடக்கு மாங்குடி.

சிதம்பரம் கோ. சித. மடாலய வெளியீடு.

பரிசோதகர் :

கோ. ம. மகா. இராமசாமி ஐயா.

உ சிவமயம்.

ஸ்ரீமத் அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகள் தோத்திரம்

உமையாள்புரம் தமிழ்ப்பண்டிதர்
உ. ரா. சு. இயற்றியது.

உன்னுமொருதாஞ் சொன்னாலு முத்தியென
வுயர்மறைகள் பறைமுழக்கும்
உண்மையை யறிந்திந்த நாட்டிலே துவிதமத
முற்றபல ரெக்காலமும்
மன்னுமனத்திலெழு துவேஷத்தி னாலேனு
மறவாம லினதுபெயரை
வாழ்த்தியுஞ் சிந்தனையி லாழ்த்தியும் பத்திரிகை
வாயிலானும் மிழிவுறச்
சொன்னார்க ளாயினுங் கதியடைதல் திண்ணமே
தொண்டனேன் கண்டுமொழியாற்
றாயசித் தத்தொடு துதித்துநின் றேனெனது
துன்பந்துடைத் தன்புறும்
அன்னையெ னக்கருள்க கோவிலூர் மேவிவள
ரத்துவித ஞானமணியே
அண்ணலெனத் துதிசெய் விண்ணோர் தமக்கருள்செய்
யண்ணாமலைக்* கடவுளே. (குரவனே.)

---

* தெய்வம், முனிவர், நன்மைப்பண்பு முதலிய பல பொருட் பயக்குமொரு சொல்லாகிய "கடவுள்" என்றமொழி ஈண்டு இருவகைப் பற்றையுமுற்றந்துறந்த "முனிவர்" என்னும் பொருளீந்து நின்றது. இதனை,

ஏவைக்கடக்கும் விழியாரை வென்ற வியலுடையான்
காவைப்பொருவுஞ் சிவப்பிரகாசக் "கடவுள்" என்போன்
பாவைப்பலமுறையானுணர்ந்தோர்கள் படித்துணரக்
கோவைத்தமிழ்நந் திருவெங்கைவாணர்க்குக் கூறினனே

என்ற பெரியோர் வாக்கால் நன்குணரலாம்.

உ

சிவமயம்

தோத்திரம்

ஷை சுவாமிகளின் பாதசேகரருள் ஒருவராகிய
சுவாமிநாத வுபாத்தியாயரால் இயற்றப்பெற்றது.

பன்னிருசீர் கழிநெடி லாசிரிய விருத்தம்.

சீர்கொண்ட தவமெனுந் திருநாட்டி லேகாந்த
திவ்யநன் னகரமதனில்
தீரமுறு துறவென்னு மரண்மனையின் மெய்ஞ்
ஞான சிங்காத னத்தமர்ந்து
கார்கொண்ட காருண்ய செங்கோற்செ லுத்தியே
காசில்வை ராக்யமென்னுங்
கனபடை யெடுத்தந்த காரமாம் பகையைக்
கடிந்தடிமை யாமுமுட்சுப்
பேர்கொண்ட குடிகளைக் காத்துநற் சாதனப்
பெருநெறியி லேநடத்திப்
பேரின்ப மானசுக வாழ்வில்வாழ் வித்திடும்
பிரபுவே யெனையாளுவாய்
ஆர்கொண்ட பொழின்மருவு கோவிலூர் மேவி
வள ரத்துவித ஞானமணியே
அண்ணலெ னத்துதிசெய் விண்ணோர்த மக்கருள்
செயண்ணும லைக்கடவுளே (1)

காசினியில் முடிவற்ற சமுசார பந்தமாங்
கடல்கடத் திடும்வங்கமே
கழலிணை கடொழுமடியர் மனதிலுறை தங்க
கருணைமழை பொழியுங்கமே [மே
மாசில்வை ராக்கியத் தவராஜ சிங்கமே
வண்டமிழ்க் கொருசங்கமே
வாயார வாழ்த்துவோ ரங்கமே குடிகொண்டு
வரமளித் தருள்புங்கமே
பேசின்மறை முடிவான பிரமமே யோருருப்
பெற்றனைய குருவடிவமே
பேருலகி லுன்னடிப் புகழையே பரவிடும்
பேயனேன் றனையாளுவாய்
ஆசினி தருக்கணிரை கோவிலூர் மேவிவள
ரத்துவித ஞானமணியே
அண்ணலெ னத்துதிசெய் விண்ணோர்த மக்
யண்ணும லைக்கடவுளே. [கருள்செ(2)

அறுசீர் கழிநெடிலாசிரிய விருத்தம்.

தருமகுணக் குன்றென்கோ தடங்கருணைக்
கடலென்கோ தகைசால் நால்வர்க்
கருமறையின் முடிபுரைத்த வாரியனென்
கோவருண கிரிக்கந் நாளில்

வருகுமர தேவனென்கோ மாணிக்க
வாசகரை வந்தாட் கொண்ட
குருமணியென் கோவடியேன் னின்றனையீண்
டெவ்வண்ணம் குறிக்கொள் வேனே. (3)

முத்திக்கு வித்தென்கோ மூவருக்கு
மறிவரிய முதலென் கோநற்
பத்திக்குக் கனிந்தவருட் பழச்சுவையின்
பயனென்கோ பக்கு வோரை
நத்திக்கு வந்தணையு நாயகனென்
கோகடைய நாயி னேற்குச்
சித்திக்குங் கோவிலூர் தனிற்கிடைத்த
குருமணியென் தேவ தேவே. (4)

கீழப்பழுவூர்
சின்னையா ரெட்டியார் இயற்றியது.

அறுசீர் கழிநெடிலாசிரிய விருத்தம்

உண்ணு முலையி லுடையதனி
லோவா துரைக்கு முரையதனின்
நண்ணு திருந்து நயப்பதற்கு
நன்னர் பதமே நல்கிடுவாய்

தண்ணு ரலையிற் குளித்தெழுந்து
சாற்றென் றுதிகள் செவிமடுக்கும்
அண்ணு மலையென் தேசிகனே
யன்பின் பெருக்கே யருளாளா. (5)

திருவண்ணுமலை ஈசான்ய மடம்

ஸ்ரீ மத் நடேச ஞானதேசிக சுவாமிகள் இயற்றியது.

எழுசீர் ஆசிரிய விருத்தம்.

தாவுரு புலன்க டமியனை மயக்கித்
தாண்டவஞ் செயுமவை கடிந்து
மேவரு ஞான விழுப்பெருஞ் செல்வ
மேவுமா ரருண்மதி நதிசூழ்
கோவிலூ ருறையண் ணுமலை ஞான
குணக்கட லானதே சிகனே
தேவர்தந் தேவே சமிவனத் தரசே
தில்லைநா யகக்குரு மணியே. (6)

அருச்சனை புரிந்து வழுத்திமெய் யன்பா
லகங்குழைந் துள்வெளிக் கரணஞ்

செருச்செயா வண்ணந் தகைந்துநா டோறுந்
திவ்விய நோக்குற வருள்வாய்
உருச்சுவை நாற்ற மொலியொடு ருதி
யொன்றுமின் றியபர வடிவாந்
திருச்சமி வனத்தண் ணுமலை ஞான
தேவனும் வீரசே கரனே. (7)

தோத்திரம் முற்றிற்று.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கோவிலூர் அடியார்களிலொருவர் இயற்றியது.

விற்பனர் போற்றும் வீரசே கரமா
விறையருள் பெற்றமா தூயோன்
கற்றவற் கினியன் கல்வியிற் பெரியன்
கருதருந் திடமருள் வான்சீர்
சிற்சபை நடன மிடுமிறை வற்குச்
சீரனங் கட்டளை வைத்தோன்
நற்றவ வண்ணு மலைக்குர வன்சீர்
நறுமலர்த் திருவடி பணிவாம்.

உ
சிவமயம்.

கோ. ம. மகா. இராமசாமி ஐயா இயற்றியது.

அன்னவன்*கீதையாலே யறைந்திடும் பொருட்கு [மாருய்
மன்னியமதங்களென்ற மாமத யானைகட்கு
உன்னத சிங்கம்போல உறைந்தநல் ஞான யோகி
அன்னவனரும்பட்டம் அண்ணுமலைஞானகுரவன் 1

வந்துறுசீடர்க் கெல்லாம் வழங்கிநல் லாத்பஞானம்
அந்தகன் றனக்குத் தானேயந்தகனுகு மீசன்
முந்தியவருளைப் பெற்ருேன் மொழியண்ணு நாகஞான
சுந்தரதேசிகன்றன் றுணையடி தொழுது வாழ்வாம் 2

---

* அன்னவன் = பிரமதேவன்

பாண்டியன் அச்சகம், சிதம்பரம் '52.

ஸ்ரீ அண்ணுமலை ஞானதேசிக சுவாமியவர்கள் பரிபூரணச் செய்யுள்.

விண்ணுர் துதிசெய்யும் வீரப்ப தேசிகரின்
றண்ணுர் திருவடியைச் சார்சீட—ரண்ணு
மலைஞான தேசிகர் மாகோவி லூரி
னிலையான கைவல்யம் நேர். 1

சித்தார்த்தி வைகாசி தேதியெட்டு சௌமியநா
ளித்தா ரணிகலியை யாயிரம்—பத்திரண்டிற்
சட்டி திருவோணஞ் சாரமர பக்கத்திற்
றிட்டமுடன் சிம்மமெனத் தேர். 2

உ

சிவமயம்.

பாண்டிநாட்டிலுள்ள சமிவன க்ஷேத்திரம் என்னும்

கோவிலூர் ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமியவர்கள்

சமாதி வைபவமும், குருபரம்பரை வரலாறும்.

—❖❖❖—

இஃது

கண்டனூர், நா. பெ. நா. மு. முத்துராமையா அவர்கள் இயற்றியது.

சிதம்பரம் கோ. சித. மடாலய வெளியீடு.

உ சிவமயம்.

ஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிகரவர்கள் சமாதிவைபவம்

இயல்பான கலியுகம தையாயி ரத்தொடிரு
பத்தினுக் குற்றதான
ஏற்றமுள சித்தார்த்தி வருடம்வை காசிமதி
யெட்டினிற் சௌமியவாரம்
ஏரமர பக்ஷமுறு திதிசஷ்டி திருவோண
மெழில்சிம்ம லக்கினத்தே
எங்கணும் புகழ்கோவி லூர்நெல்லை நாயகியி
னிணையடிக் கன்பரான
நயமேவு றும்முத்து ராமலிங் கையனரு
ணண்ணுமரு ணாசலகுரு
நாடுறி லிரண்டாவ தாகுஞ்*சி தம்பரமெ
னச்சொல்*பர மேட்டிமூன்றும்
ராமசா மிகள்பட்ட நான்காகும் வீரப்ப
ஞானகுரு வைந்தாவதாய்
நாடெலாம் புகழ்பணி யியற்றித் திருக்களரில்
ஞானசோ தியிலடங்க

× நம்மனோர் பார்வையால
பரமேஷ்டி குரு

---

* பரமேட்டி=நமமனோர் பார்வையால் பரமேஷ்டி குரு.

அயலிலா வண்ணமை லத்தேசி கன்பெற்ற
வறிவினு லுற்றபட்டம்
ஆறிலிற் குருநாத னுக்குரிய பணிதன்னை
யழகாக வேநடத்தி
ஆக்கமுள பிரமவித் யாப்ரசா ரணசபையை
யன்புடன் றுனமைத்து
அத்துவித நிலைமைக்கு மேனிலைமை யில்லையென்
றணியுறுங் காரைநகரிற்
சுயமான வேதாந்த வெற்றிநற் கொடியது
துலங்கவே கட்டியெங்குஞ்
சொலித்திட மடத்தினுக் காகவேண் டியபொருள்
துரிதமாய்ச் சேகரித்துந்
தூயனுங் கடவுளுக் குரியபணி யாவையுஞ்
சுகமுட னடத்திமேலாஞ்
சுத்ததத் துவவடிவ மாயகண் டானந்த
சொரூபமா யிலகினனே.

சிவமயம்.

ஓம் ஸ்ரீ கணேசாய நம: சிவாப்யாம் நம: குருப்யோ நம:

பாண்டிநாட்டிலுள்ள சமிவன க்ஷேத்திரமென்னும்

ஸ்ரீ கோவிலூர் குரு பரம்பரை வரலாறு,

வெண்பா பஞ்சகம்.

இஃது

திருவண்ணாமலை ஈசானியமடம்,

ஸ்ரீ நடேசஞான தேசிகசுவாமியவர்கள் இயற்றியது.

திருநெல்லை யம்மையொடு செய்யகொற்ற நாதர்
மருவுஞ் சமிவனத்தே மன்னி — யருளுகந்த
ஞர்வா ரிதிபருகி யண்ணன்முத்தி ராமலிங்கக்
காருரும் விந்தையைக் கண்டு (க)

அருணா சலதே வருட்சிதம்ப ரேசன்
தெருளசேர்நெற் செய்யவுளச் செய்யில் — தருவாகுங்
காமமுதல் வெட்டிவிவே கக்கருவி யாலுழு
தேமுற மோனவித் திட்டு (உ)

ஞானமுறு நெற்பயிரை நன்ருய் வளர்த்துமே
லான பலரோ டனுபவித்தார் — வானமுதைத்
திவ்வியவி ராமேசன் செம்மைமிகு வீரேசன்
தவ்வறுமண் ணுமலையீ சன் (ங)

முறையினவ்வா றுண்டனர் முன்னமவ ருட்பின்
நிறைபிரம வித்தையவை நேர்வித் — துறைவிடத்தே
காணப்பல் லோருமுயர் காரைக் குடிநகரில்
யாணர் ஜயக்கொடி யாத்து (ச)

ஐயா யிரத்திருப தாண்டுகலி சித்தார்த்தி
வைகாசி யெட்டில் வருபுதனில் — மொய்யார்
திருவோணஞ் சஷ்டிசிம்மஞ் சேர்நாள்வீ டுற்ருன்
குருதேவண் ணுமலையெங் கோன். (ரு)

பஞ்சகம் முற்றின.

சுபமஸ்து.

குறிப்புரையுடன் அன்னுவயம்.

அண்ணல் முத்திராமலிங்கக்கார் அருளுகந்தனுர் வாரீதிபருகித் திருநெல்லையம்மையொடு செய்ய கொற்ற நாதர் மருவுஞ் சமிவனத்தே மன்னியூரும்விந்தையை அருணுசலதேவு

அருட் சிதம்பரேசன் கண்டு, தெருள் சேர் நெற் (பயிர்) செய்ய, உளச்செய்=மனமாகியவயல் - யில்விவேகக் கருவியால் காம முதலாகும் தருவெட்டியுழுது, ஏமமுற*மோனவித்திட்டு, ஞானமுறு = ஞானவமுது நிறைந்த - நெற்பயிரை = சிரவணுதிரூப நெற்பயிரை - நன்ருய் வளர்த்து =அருணீர் பாச்சி இயம நியமாதி யெருவிட்டு ஐயந்திரிபாங்களைபறித்து அகந்தை முதலாம் பசுவாதிகள் மேய்ந்தழித்து விடாமற் காத்து வளரச் செய்து - மேலானபலரோடு=அரசப்ப சுவாமிகள் வெள்ளையப்ப சுவாமிகள் பழனியப்ப சுவாமிகள் நித்தியானந்த சுவாமிகள் பெரியசுவாமிகள் முதலிய பலரோடு-திவ்வியவானமுதைமுன்னமனுபவித்தார், பின் இராமேசன், செம்மைமிகு வீரேசன், தவ்

---

* மோனம் = முனித்தன்மை, ஈண்டு சுரோத்திர சம்பந்தி மஹா வாக்கியத்தின் மேனின்றது.

வறும் அண்ணுமலை யீசன், அவ்வாறே = உளச்செய்யில்மோன வித்திட்டு ஞானமுறு நெற்பயிரை நன்ருய் வளர்த்து மேலான பலரோடு (சாக்கைச் சுவாமிகள் வெங்கடாசல சுவாமிகள் முதலிய பலரோடு) திவ்வியவானமுதை முறையின் உண்டனர் = ஒருவருக்குப்பின் னெருவராகப் பீடத்து நிரல்பட இருந்துண்டு தேக்கிட்டனர் — அவருள், மொய்=வலி, ஈண்டு மனத்திட்பம் — ஆர் அண்ணுமலைக்குருதேவு எங்கோன், உறை விடத்து = கோவிலூரில், நிறைபிரமவித்தை அவை = பிரஹ்ம வித்யாப்ரசாரண சபையை — நேர்வித்து = அடைவித்து, உளதாக்கி யென்றபடி, உயர் காரைக்குடி நகரில் பல்லோருங் காண, யாணர் ஜயக்கொடி யாத்து = வேதாந்த ஜயக்கொடி கட்டி — அழகினை யுணர்த்தும் யாணர் என் னுஞ் சொல் அழகினை யுடைய அறிவிற்காய் அறிவின் பெயர் அறிவினையுபதேசிக்கும் வேதாந்தத்துக்கானது இருமடியாகு பெயர், கலி ஐயாயிரத் திருபது சித்தார்த்தி ஆண்டு வைகாசி யெட்டில் வருபுதனில் திருவோணம் சஷ்டி சிம்மம் சேர்நாள் வீடுற்ருன்.

பாண்டியன் அச்சகம், சிதம்பரம் '53